<u>**நெல்லிக்குப்பம் நகராட்சி**</u>

<u>**நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்**</u>

**2019**–ம் ஆண்டு ஜனவரி மாதம் **31**–ம் தேதி வியாழக்கிழமை மாலை **5.00** மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள் .1..** நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர் **– 2018** மாதத்திய நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .

<u>**கோப்பு எண் . 3792/2018/இ1**</u>

<u>**தீர்மான எண் : 20. அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**</u>

<u>**மன்றபொருள்.2.**</u> நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையத்தினுள் உள்ள பேருந்து கடை எண்கள்.**1, 2, 6, 10, 11** மற்றும் **13** ஆகிய கடைகளுக்கு **2015–16**ம் ஆண்டில் ஏலம் கோரப்பட்டு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. பி.ஏ.எச் சாலையில் உள்ள தினசரி மார்க்கெட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கோழிக்கறி கடை எண்.**9, 10** மற்றும் **11** ஆகிய கடைகளுக்கு **2016–17**ம் ஆண்டில் ஏலம் கோரப்பட்டு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதுநாள் வரை குத்தகை உரிமையாளர்கள் கடை வாடகை செலுத்தப்படாமல் இருந்துள்ளதால், அக்கடைகளை இந்நகராட்சி வருவாய் ஆய்வர் அவர்கள் மேற்கண்ட கடைகளை பூட்டி சீல் வைத்துள்ளார். குத்தகைதாரர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ள தொகையில் வாடகை தொகையினை ஈடு செய்து கொள்ளவும், மேலும் குத்தகை உரிமத்தை ரத்து செய்யவும், மேற்கண்ட கடைகள் அனைத்தும் மறு ஏலம் வைக்க பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.468/2006/அ1**

<u>**தீர்மான எண் : 21. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**</u>

<u>**மன்றபொருள்.3.**</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள வார்டு எண்.**11** திடீர்குப்பத்தில் உள்ள செயின்ட்பால் டிரஸ்டுக்கு சொத்துவரி நிலுவை தொகை ரூ.**63,292/–**யும், வார்டு எண்.**04** முள்ளிகிராம்பட்டு ரோட்டில் உள்ள டிரஸ்ட் செயின்ட் டொமினிக் மெட்ரிகுலேசன் பள்ளிக்கு சொத்து வரி நிலுவை தொகை ரூ.**1,06,050/–**யும் மற்றும் வார்டு எண்.**23** பெரிய தெருவில் உள்ள டிரஸ்ட் செயின்ட் டொமினிக் மெட்ரிகுலேசன் பள்ளிக்கு சொத்துவரி நிலுவை தொகை ரூ.**12,083/–** யும் ஆக மொத்த தொகை ரூ.**1,81,425/–** ஆகும். சென்னை, உயர்நீதிமன்ற W.P.No.31870/2006 உத்திரவின்படி, மேற்கண்ட தொகைகளை நீக்கம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளுக்கும் சொத்துவரி புதியதாக **2017–18**ம் ஆண்டு இரண்டாம் அரையாண்டு முதல் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, உத்திரவின்படி வரிவிதிப்பில் உள்ள தொகையினை நீக்கம் செய்ய மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3444/2006/அ1**

<u>**தீர்மான எண் : 22. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**</u>

<u>**மன்றபொருள்.4.**</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**03** முள்ளிகிராம்பட்டு பகுதியில் அமைந்துள்ள வி.ஐ.பி கார்டன்(VIP) என்ற நகரில் **8** மனைகள் உள்ளன. அம்மனைகளுக்கு காலிமனை வரி விதிக்கப்பட வேண்டிய உள்ளதால், தற்போது சொத்துவரி சீராய்வு பணி மேற்கொண்டபோது இந்நகராட்சி பகுதியில் உள்ள **30** வார்டுகளிலும் உள்ள அனைத்து தெருக்களை சேர்க்கப்பட்டு மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வி.ஐ.பி கார்டன்(VIP) என்ற நகர் தற்போது புதியதாக வார்டு **03**ல்

உதயமாகி உள்ளதால், அதனை மண்டலம் 'சி' (ZONE 'C') அடிப்படையில் கணினியில் பதிவேற்றம் செய்து மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.0114/2019/அ1**

**<u>தீர்மான எண் : 23. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.5.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்கைக்குள் ஆண்டு தோறும் நடைபெறும் தென்பென்னை ஆற்று திருவிழாவை முன்னிட்டு, பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி , முள்ளிகிராம்பட்டு ஆற்று படுகையில் உள்ள மேடுபள்ளங்கள், முட்புதர்கள் மற்றும் செடி கொடிகளை ஜே.சி.பி ,இயந்திரம் மூலம் ஆகற்றி சீர் செய்து கொடுத்த வகைக்கு, இந்நகராட்சி மூலம் ஒப்பந்தகாரார் திரு.எஸ்.பரிமளா அவர்களுக்கு, நகராட்சி சட்டம் பிரிவு 15 ன் கீழ் ரூ.38800/– மட்டும் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினம் நகராட்சி சட்டம் பிரிவி 15 ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண் 118/2019/எச்1)**

**<u>தீர்மான எண் : 24. அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 287 நாள் 22.11.2018 ன் படி 10.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி ஜம்புலிங்கம் பூங்கா மேல்நிலை தொட்டி வளாகத்தில் புதியதாக மின் மோட்டார் அறை கட்டுதல் | 4.00 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி | 4.15% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திருமதி. எஸ்.பரிமளா | 7.89% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதத்தை குறைத்து தர கோரி கடிதம் அனுப்பட்டதில் திருமதி. எஸ்.புவனேஸ்வரி அவர்கள் 3.00**%** மதிப்பீட்டை விட கூடுதல் விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் அளித்துள்ளார். கட்டுமான பொருட்களின் உள்ளுர் விலை விகிதம் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி இவருடைய ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம். கூடுதல் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 4951 /2019/இ1).**

**<u>தீர்மான எண் : 25. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.7.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–19ஆம் ஆண்டின் கீழ் 8 வது மாநில உயர் மட்ட குழு கூட்டம் 19.12.2018 உத்திரவின் படி 11.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான சரவணபுரத்தில் உலர் திடக்கழிவுகள் சேகரிப்பு மையம் கட்டும் பணி . (Material Resource Recovery Centre ) | 18.00 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி | **4.63 %** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | M/s. ஜெய் & கோ | **6.10%** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :–</u> ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதத்தை குறைத்து தர கோரி கடிதம் அனுப்பட்டதில் திருமதி. எஸ்.புவனேஸ்வரி அவர்கள் 2.70**%** மதிப்பீட்டை விட கூடுதல் விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் அளித்துள்ளார். கட்டுமான பொருட்களின் உள்ளூர் விலை விகிதம் மற்றும் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி இவருடைய ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம். கூடுதல் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 0044 /2019/இ1).

**<u>தீர்மான எண் : 26. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.8.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான பி.ஏ.எச் சாலை அமைந்துள்ள சமுதாய கூடம் (திருமண மண்டபம்) பல முறை ஏலம் விடப்பட்டு, ஏலம் போகாதால் KEC INTERNATIONAL LTD என்ற நிறுவனம் இரயில்வே பணி மேற்கொண்டு வருவதால், அந்நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களை தங்க வைக்க 3 மாத கால அவசரம் கேட்டு விண்ணபத்துள்ளார்கள். மேற்படி, சமுதாய கூடத்திற்கு முன்பணம் ரூ.30,000/– காசோலையாக வழங்கியுள்ளார்கள். அதன்படி, மேற்கண்ட நிறுவனத்திற்கு மாத வாடகையாக ரூ.15,000/– என நிர்ணயம் செய்து 3 மாத காலத்திற்கு சமுதாய கூடம் வாடகை விடவும், உத்தரவு வழங்கவும் மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.0164/2019/அ1

**<u>தீர்மான எண் : 27. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் குத்தகை இனங்கள் நீண்ட நாட்களாக பல்வேறு இனங்கள் நிலுவையில் உள்ளது. மேற்படி, குத்தகை இனங்களில் ஒரு சில இனங்கள் வழக்கு கொடுத்தும் நேரிலும் வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வருவாய் ஆய்வரின் குறிப்பின்படி 1984–85 முதல் 2007–08 வரை உள்ள இனங்களில் ஒரு சில இனங்கள் சம்பந்தப்பட்ட நபர்கள் இல்லாமலும் வசூலிக்க இயலாமலும் உள்ளதென குறிப்பிட்டுள்ளதால், தற்போது நடைபெறும் பொது சீராய்வின்போது குத்தகை இனங்களில் வசூலிக்க முடியாதவை மற்றும் காலங்கடந்தவை இனங்கள் கீழ்கண்டவாறு உள்ளது.

| வ.எண். | வரிவிதிப்பு எண். | பெயர்கள் திரு / திருமதி | குத்தகை | நிலுவை காலம் | ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 094/82 | பழனிசாமி நயினார் | தினசரி மார்க்கெட் | 1984–85 | 6665 |
| 2 | 094/83 | சி.ராமனாதன் | தினசரி மார்க்கெட் | 1997–98 | 17541 |
| 3 | 094/89 | கே.எம்.ராமகிருஷ்ணன் | கழிப்பிடம் | 1997–98 | 915 |
| 4 | 094/91 | எஸ்.சுரேஷ் | தென்னை மரம் | 1997–98 | 3227 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 094/92 | எஸ்.மண்ணாங்கட்டி | தென்னை மரம் | 1998–99 | 1805 |
| 6 | 094/84 | ஆர்.புஷ்பநாதன் | தினசரி மார்க்கெட் | 1999–2000 | 53218 |
| 7 | 094/86 | கே.பாபு | தினசரி மார்க்கெட் | 1999–2000 | 9558 |
| 8 | 094/93 | பி.ராஜேந்திரன் | தென்னை மரம் | 1999–2000 | 2006 |
| 9 | 094/96 | ஆர்.புஷ்பநாதன் | தென்னை மரம் | 1999–2000 | 2537 |
| 10 | 094/94 | எம்.ராஜி | தென்னை மரம் | 2000–01 | 2065 |
| 11 | 094/87 | என்.கிருஷ்ணசாமி | தினசரி மார்க்கெட் | 2002–03 | 38350 |
| 12 | 094/90 | என்.ஜெகனாதன் | வாகன நிறுத்துமிடம் | 2002–03 | 2443 |
| 13 | 094/85 | எ.கல்யாணி | தினசரி மார்க்கெட் | 2002–03 முதல் 2004–05 வரை | 64046 |
| 14 | 094/68 | எஸ்.ஜெயமணி, எம்.பாஸ்கரன் | பனை மரங்கள் | 2004–05 | 267 |
| 15 | 094/502 | ஜார்ஜ் பெர்னான்டஸ் | ஆடு அறுக்குமிடம் | 2005–06 முதல் 2007–08 வரை | 2171 |
| 16 | 094/504 | சிவக்குமார் | வாகன நிறுத்துமிடம் | 2005–06 | 6195 |
| | | | | மொத்தம் தொகை | 213009 |

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் செங்கற்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரின் அறிவுரைப்படி, மேற்காணும் குத்தகை இனங்கள் காலகடந்தவை கேட்பிலிருந்து தள்ளுபடி செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** குத்தகை இனங்களில் காலங்கடந்தவை பலமுறைநேரில் தொடர்புகொண்டும், விசாரணை செய்தும் சம்மந்தப்பட்ட நபர்கள் இல்லாததாலும் குத்தகை இனங்கள் வசூலிக்க முடியாததாலும் பல ஆண்டுகளாக நிலுவை கேட்பு வசூலிக்க முடியாததாலும் வருவாய் ஆய்வர் குறிப்பின்படி தள்ளுபடி செய்யலாம்.

ந.க.எண்.1019/2018/அ1

**தீர்மான எண் : 28. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.10.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசுகளால் ஏற்படக்கூடிய டெங்கு காய்ச்சல் மற்றும் மலேரியா போன்ற நோய்கள் பரவாமல் இருக்க வீடு வீடாக சென்று டயர், ஓடு, உரல், குளிர்சாதனப்பெட்டி, பிளாஸ்டிக் குவளைகள் மற்றும் டீ கப்புகள் போன்றவற்றில் தேங்கியுள்ள நீரில் டெங்கு கொசுப்புழுக்கள் உள்ளனவா என ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதம் ந.க.எண் 2571/2017/ஜே1 நாள்,28.11.2017 உத்திரவில் தெரிவித்துள்ளவாறும், மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த விலை விகிதப்படி முற்றிலும் தற்காலிக தினக்கூலி அடிப்படையில் 6 மாத காலம் நியமனம் செய்ய 10 களப்பணியாளர்களுக்கு தினக்கூலிக்கு உண்டான உத்தேச செலவினம் மற்றும் அனைத்து பகுதி மக்களுக்கும் டெங்குக் காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திட டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வால் போஸ்டர் போன்ற விழிப்புணர்வு நோட்டீஸ்கள் மற்றும் விளம்பரங்கள் ரூ.5,00,000/– வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.2015/2017/எச்1

**தீர்மான எண் : 29. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.11.</u>** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 05.06.2018 அன்று சட்டமன்ற பேரவை விதி 110ன் கீழ் சுற்றுசூழல் பாதுகாக்க 01.01.2019 முதல் நெகிழி பயன்பாடு இல்லா தமிழகத்தை உருவாக்கிட மறுசுழற்ச்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி இருப்பு மற்றும் உபயோகத்திற்கும் தடை விதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நெகிழி பயன்பாடு இல்லாத நகரமாக உருவாக்கிட நெகிழி பயன்பாட்டிற்கு முற்றிலுமாக தடைவதிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் வர்த்தக சங்கள் 08.01.2019 அன்று நெகிழி தடை குறித்து மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இக்கோரிக்கை மனு மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தும், தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்கள் பயன்படுத்த கூடாது என திட்டவட்டமாக அறிவுறுத்தப்பட்டது. இதுக்குறித்து தினகரன் நாளிதழ் கடலூர் மாவட்ட செய்தி நாள் 09.01.2019 செய்தி தாளில் , இந்நகர் பகுதியில் பிளாஸ்டிக் பேப்பர் உபயோகப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது என உன்மைக்கு புறம்பாக மற்றும் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அச்செய்திக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடி அறிவுரையின் அடிப்படையில் மேற்படி தினகரன் நாளிதழ் செய்திக்கு மறுப்பு செய்தியினை உடன் பொதுமக்களுக்கு தெரியும் வன்னம் தினத்தந்தி நாளிதழில் 10.01.2019 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. அவ்வாறு விளம்பரம் செய்யப்பட்டமைக்கு பட்டியல் தொகை ரூ.5242/– ஐ இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு.</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

<u>கோப்பு எண். /2017/எச்1</u>

**<u>தீர்மான எண் : 30. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.12.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் . 11 திடீர்குப்பம் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் தொட்டி மற்றும் மின் மோட்டார் பொருத்தும் பணிக்கு ( சிறு மின் விசை பம்பு ) தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 380000/– க்கும் செலவை நகராட்சி குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.0545/2019/இ1**

**<u>தீர்மான எண் : 31. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.13.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் . 2ல் வான்பாக்கம் நம்ம டாய்லெட்டில் உள்ள ஆழ்துளை கிணற்றில் நீர் மட்டம் குறைந்து விட்டதால் கழிவறையை இயக்க இயலாத நிலை உள்ளது . எனவே புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 310000/– க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.0546/2019/இ1**

**<u>தீர்மான எண் : 32. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.14.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் . 30 சரவணபுரம் மாரியம்மன் கோயில் எதிர்புறம் உள்ள கால்வாயின் மேல்புறம் அமைக்கப்பட்டுள்ள RCC சிலாப் உடைந்து விட்டதால் வாகனங்கள் செல்லவும் , பொது மக்கள் அந்த கால்வாயை கடந்து செல்லவும் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளதால் புதியதாக RCC சிலாப் மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 40000/– க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.0547/2019/இ1**

**<u>தீர்மான எண் : 33. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.15.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் . 25 காமராஜ் நகர் நம்ம டாய்லெட்டில் தண்ணீர் விநியோகம் அதன் அருகில் ஏற்கனவே அமைந்துள்ள சிறு மின் விசை பம்பு மூலம் செய்யப்பட்டு வந்தது . தற்பொழுது ஆழ்துளை கிணற்றில் மண் இறங்கியதால் மோட்டார் வெளியே எடுக்க முடியவில்லை . இதனால் தண்ணீர் விநியோகம் செய்ய இயலவில்லை . எனவே டாய்லெட் அருகில் புதியதாக கை போர் அமைத்து 1 HP மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 20000/– க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் , பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி.S.புவனேஸ்வரி மூலம் மேற்கெள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 0550 /2019/இ1**

**<u>தீர்மான எண் : 34. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.16.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி நகர மன்ற தீர்மான எண் . 185 நாள் . 07.09.2018 ன் படி தேவநாதன் நகர் நகராட்சி பூங்காவிற்கு கம்பி வேலி அமைக்கும் பணி மேற்க்கொள்ள 09.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.N.சந்திரசேகர் , ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது . இதில் மீதம் உள்ள தொகையை நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள Onsite Composting Centre-ல் பாதுகாக்க கம்பி வேலி அமைக்கவும் , வர்ணம் பூசி பயன்படுத்தி கொள்ளவும் பணியை அதே ஒப்பந்ததாரைக் கொண்டு ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மேற்கெள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 4102/2018/இ1**

**<u>தீர்மான எண் : 35. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.17.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி ஜம்புலிங்கம் பூங்காவில் தினசரி காலை மற்றும் மதிய வேலையில் துப்புரவு பணியாளர்கள் வருகை பதிவேடு மற்றும் துப்புரவு பணி பிரிப்பு நடை பெற்று வருகிறது . இதற்காக தனி அறை இல்லாமல் சிரமப்படுகின்றனர் . எனவே ஜம்புலிங்கம் பூங்கா வளாகத்தில் புதியதாக துப்புரவு அலுவலர் அறை கட்ட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 4,00,000 கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 0552/2019/இ1**

**<u>தீர்மான எண் : 37. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி